Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# எளிய இல்லங்களும் ஏற்றமிகு வீடுகளும்

திரு. ச. தனசேகரன்
உதவிப்பேராசிரியர், பொறியியல் தொழில்நுட்பத் தமிழ் வளர்ச்சி மையம்,
அண்ணா பல்கலைக்கழகம், சென்னை- 25.
thamizhiyalan@gmail. com

100

**ஆய்வுச் சுருக்கம்**

திணை சார் வாழ்விடங்கள் - வாழ்விட உருவாக்கம் - பயன்பட்ட இயற்கை பொருட்கள் - பொருளாதார வேறுபாடுகள் - காற்றோட்ட வசதி - கதவுகளும் காலதர்களும் - தேயா மாடம் - நிலவு பயன் கொள் முற்றம் - மீள் சேமிப்பு அமைப்புகள் - பிற்காலத்திற்கான முன்னோடிகள் ஆகியவற்றை இவ்வாய்வுக் கட்டுரை விளக்குகிறது.

**திறவுச்சொற்கள்: இல்லம், வாழ்விடங்கள், தேயா மாடம், முற்றம்**

**வீடுகளின் தேவையும் தோற்றமும்**

தொடக்க நிலையில் நிலையற்ற வாழ்விடப் பகுதிகளை மனிதர்கள் கொண்டிருந்தார்கள். காலப்போக்கில் தங்களுக்கான பாதுகாப்பான வாழ்விடங்களை தாங்கள் வாழும் நிலத்திற்கு ஏற்ப உருவாக்கிக் கொண்டார்கள்

இது குறித்த செய்திகளை திணை சார் வாழ்விடங்களாக சங்க இலக்கியங்கள் மூலம் அறிய முடிகிறது

**குறிஞ்சி நில வீடுகள்**

மலையும் மலை சார்ந்த பகுதியுமான குறிஞ்சி நிலத்தில் அங்கு கிடைக்கிற மரம், புல் வகைகள் போன்றவற்றைக் கொண்டு தங்களுக்கான வாழ்விடங்களை அமைத்துக் கொண்டார்கள். இன்றைக்கு இருப்பது போல் பெரிய அடித்தளங்களோடும் மிக உயர்ந்த கட்டுமானங்களோடும் அந்த வீடுகள் அமைந்திருக்கவில்லை. ஆயினும் மனித வாழ்க்கைக்குத் தேவையான மிக முக்கியமான கூறாகிய "பாதுகாப்பினை உறுதி செய்து கொள்வதாக அவ்வீடுகள் அமைந்திருந்தன எனலாம்.

தமிழகத்தில் குறிஞ்சி நிலப் பகுதிகளாக அமைவது மேற்கு மற்றும் கிழக்கு தொடர்ச்சி மலைகள். மலையில் வாழும் மக்கள் பல ஆயிரம் ஆண்டுகளாக தங்களை சுற்றியுள்ள வனப்பகுதிகளை பாதுகாப்பதில் சிறந்தோங்கி இருந்திருக்கின்றனர் என்பதை இலக்கியங்களில் காண்கிறோம். பாரியின் பறம்பு மலை, அங்குள்ள மக்களின் சிறப்பு பற்றி தமிழகத்தின் பட்டி – தொட்டி என எங்கு சென்றாலும் அதன் சிறப்பை அறியலாம்.

**முல்லை நில வீடுகள்**

முல்லை நில ஆயர் குடியிருப்புகளில் அமைந்த வீடுகள் நிலத்தில் கிடைத்த புற்களால் வேயப்பட்டு அமைந்திருந்தன. வளர்ப்பு விலங்குகளான மாடு, ஆடு போன்றவற்றைப் பராமரிக்கும் பகுதிகள் முல்லை நில இல்லங்களின் முதன்மைக் கூறுகளாகும். இவைகளை மாட்டுத்தொழுவம் ,ஆட்டுப்பட்டி போன்ற சொல்லாடல்களால் அறியலாம். கால்நடைகளை கட்டுவதற்காக வீட்டின் வெளிப்புறங்களில்

ISSN:2582-9513
Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)

முளைக்குச்சிகள்நடப்பட்டு இருந்ததை சங்க இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன. கன்றுக் குட்டிகளும், ஆடுகளும் உண்பதற்கான இலை தழைகளைத் தூண்களில் கட்டி அந்த உயிரினங்கள் வாயில் மண் படாமல் தின்பதற்கான உயிர் நேயத்துடன் கூடிய ஏற்பாட்டினை ஆயர்கள் செய்திருந்ததனை முல்லை நில இல்லங்களில் நம்மால் பார்க்க முடிகிறது.

"குளகு அரை யாத்த குறும் கால் குரம்பை
செற்றை வாயில் செறி கழி கதவின்
கற்றை வேய்ந்த கழி தலை சாம்பின் . . . .
அதளோன் துஞ்சும் காப்பின் உதள
நெடும் தாம்பு தொடுத்த குறும் தறி முன்றில்
கொடு முக துருவையொடு வெள்ளை சேக்கும்
இடு முள் வேலி எரு படு வரைப்பின்"

(பெரும்பாணாற்றுப்படை 147-154)

மருத நில வீடுகள்

இன்றைய சொல்லாடலில் கூறுவது என்றால் முதன் முதலில் "நகரமயமாக்கப்பட்ட பகுதி" மருதத் திணைப் பகுதியே ஆகும்.

வேளாண்மை செய்யத் தொடங்கிய மருத நிலத்தின் உழவர்கள் தங்களது உணவு சேமிப்பின் வழியாக வாழ்க்கையை வளப்படுத்தும் அடுத்த கட்ட வளர்ச்சிக்கு நகர்த்தினார்கள்.

இதன் காரணமாக மற்ற திணைகளை விட ,மருத நில வீடுகள் சற்று கூடுதலான வசதிகளுடன் கட்டமைக்கப்பட்டன எனலாம்.

எழு காடு ஓங்கிய தொழு உடை வரைப்பில் . . .
பிடி கணத்து அன்ன குதிர் உடை முன்றில்
களிற்று தாள் புரையும் திரி மர பந்தர்
குறும் சாட்டு உருளையொடு கலப்பை சார்த்தி
நெடும் சுவர் பறைந்த புகை சூழ் கொட்டில்
பருவ வானத்து பா மழை கடுப்ப . . .
கரு வை வேய்ந்த கவின் குடி சீறூர்
(பெரும்பாணாற்றுப்படை 185-191)

மற்ற திணைகளில் பாதுகாப்புக்காக வீடுகள் கட்டப்பட்ட நிலையில் மருதத் திணையில் அவை வசதிக்காகவும் செல்வ நுகர்வுக்காகவும் அமைக்கப்பட்டன எனலாம். பெரிய வீடுகள் நீண்ட நிலைக் கதவுகள் விலங்குகளின் கண்கள் வடிவில் அமைக்கப்பட்ட அழகுணர்ச்சி மிக்க காலதர்கள்.... என்று மருத நில வீடுகளானவை வீட்டுக் கட்டுமானத் தொழில் நுட்பத்தை அடுத்த படிநிலைக்கு எடுத்துச் சென்றன. மருத நில வாழ்வியலுக்கு தேவைப்படும் அடிப்படை பொருட்களான "ஏர்" தொடங்கி உணவுப் பொருட்களை பாதுகாத்து வைக்கும் "குதிர்"வரையில் மருத நில வீடுகளில் நிரம்பி

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

இருந்ததனை- சங்க இலக்கியங்கள் பல இடங்களில் சுட்டிக்காட்டுகின்றன.

**நெய்தல் நில வீடுகள்**

"வேழம் நிரைத்து வெண்கோடு விரைஇத்
தாழை முடித்துத் கருப்பை வேய்ந்த
குறியிறைக் குரும்பை..
(பெரும்பாணாற்றுப்படை 263-265)

நெய்தல் நில வீடுகள் மூங்கில் கழிகளை குறுக்கும் நெடுக்குமாக அமைத்து தருப்பைப்புல்லால் வேய்ந்து அமைக்கப்பட்டிருந்தன.

வீட்டில் பல இடங்களில் மீன் பிடிக்கும் வரிகள் தொங்கிக் கொண்டிருந்தன. வீட்டு அருகில் பாகற்கொடிகள் படர்ந்து இருந்தன.

**பாலை நில வீடுகள்**

நீள் அரை இலவத்து அலங்கு சினை பயந்த
பூளை அம் பசும் காய் புடை விரிந்து அன்ன
வரி புற அணிலொடு கருப்பை ஆடாது . .
யாற்று அறல் புரையும் வெரிந் உடை கொழு மடல்
வேல் தலை அன்ன வை நுதி நெடும் தகர்
ஈத்து இலை வேய்ந்த எய் புற குரம்பை
(பெரும்பாணாற்றுப்படை 83-88)

பாலை நிலத்தின் எயினர் வீடுகள் ஈந்தின் இலைகளால் வேயப்பட்டு பன்றியின் தோற்றத்தோடு விளங்கின. அங்கே புலால் நாற்றம் வீசும் வேலும் கேடயமும் பத்திப்பத்திகளாய் இருந்தன.மலையில் தேன் கூடுகள் தொங்குவது போல அம்புக் கூடுகள் அவர்களது வசிப்பிடங்களில் தொங்கிக் கொண்டிருந்தன.

**சங்க கால அரண்மனைகள்**

மேலே குறிப்பிட்டதைப் போல ஐந்திணை வாழ்வியலின் எளிய இல்லங்கள் ஒருபுறத்தில் இருந்தன என்றால், பெரு வசதி மிக்க மன்னர்களும் செல்வந்தர்களும் மற்றொருபுறத்தில் வலிமைமிக்க பெருவீடுகளைக் கட்டி வாழ்ந்தனர்.

சங்க கால மன்னர்களின் அரண்மனைகளும் செல்வந்தர்களின் வசிப்பிடங்களும் மிகுந்த வசதிகள் கொண்டவையாக கட்டப்பட்டிருந்தன.

"விண்ணுற ஓங்கிய பலபடைப் புரிசை"- என்றும்

"விண் தோய் மாடத்து விளங்கு சுவருடுத்த" என்றும் சங்க கால இலக்கியங்கள் உயர்வு நவிற்சியாகக் குறிப்பிடுகின்றன.

"நிலவுப் பயன் கொள்ளும் நெடுவெண் முற்றத்துக்
கிம்புரிப் பகுவாய் அம்பணம் நிறைய

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

கவிழ்ந்து வீழ் அருவி"

—என்று குறிப்பிடும் நெடுநல்வாடை நிலவுப் பயன் கொள்வதற்கான செல்வந்தர் வீட்டின் கட்டமைப்பினைக் கண்முன் கொண்டு வந்து நிறுத்துகின்றன.

"மான்கண் காலதர் மாளிகை இடங்கள்"

– என்று வருகிற சிலப்பதிகார வரிகள் மூலமாக அன்றைய சன்னல்கள் "காலதர்கள்" என்று அழைக்கப்பட்டதனையும் அவை விலங்குகளின் கண்களின் வடிவிலும் கூட உருவாக்கப்பட்டிருப்பதனையும் அறிந்து வியக்கிறோம்.

சிலப்பதிகாரம் மதுரைக் காண்டத்தில் இடம்பெற்றிருக்கும் "ஊர்காண் காதை"யில் இதற்கான தரவுகளை நாம் எளிதில் பெற முடிகிறது.

"செல்வர்-அரசர் வீதி" என்று குறிப்பிடப்படுகிற அப்பகுதியில் சில வரிகளை நாம் கூர்ந்து நோக்குவோம்.

**இடைக்காலக் கோவில்கள்**

இலக்கிய வரலாற்று அடிப்படையில் "பக்தி இலக்கிய கால" வளர்ச்சிக்குப் பிறகு பல்வேறு கோவில்கள் பல்லவர் காலத்திலும்- பிற்காலச் சோழர் காலத்திலும்- பிற்காலப் பாண்டிய காலத்திலும் -விஜய நகரப் பேரரசு காலத்திலும்- நாயக்கர் காலத்திலும் அடுக்கடுக்காகக் கட்டப்பட்டன. அவை சங்க கால வாழ்விடங்களையும் அரண்மனைகளையும் தொழில் நுட்ப அடிப்படையில் பல படிகள் கடந்து முன்னேறி இருந்தன என்று சொல்லலாம்.

குடைவரைக் கோயில்களாக-மண்ணளிகளாக கற்றளிகளாக- பெருங்கோவில்களாக- ஆயிரங்கால் மண்டபங்களாக… விரிந்து வளர்ந்த கோவில் கட்டிடக்கலை இறைவனின் இருப்பிடத்தை உயர்வுபடுத்தியதும் அழகுபடுத்தியதும் மட்டுமன்றி தமிழக வரலாற்றில் கடவுளர்களின் இருப்பிடங்களை நிலைப்படுத்தியும் சென்றிருக்கின்றன எனலாம்.

**ஆய்வின் முடிவு**

பொருளுடையவர்களுக்கு ஒரு வாழ்க்கையும் பொருளற்றவர்களுக்கு வேறு வாழ்க்கையும் அமைவது உலகத்தில் எழுதப்படாத வரையறையாக இருக்கிறது எனலாம்.

அதனை எளிய மக்கள் வாழ்ந்த திணைப் பகுதி வீடுகளோடும், பெரும் செல்வந்தர்களும் தெய்வங்களும் உலவிய மாடமாளிகைகளோடும் ஒப்பிட்டுப் பார்க்கிற போது "இரு வேறு உலகத்து இயற்கை" என்பது தெளிவாகிறது.

பொருளாதார வேறுபாடுகள் வரைந்து போகிற கோடுகள்உணவு உடைகளில் மட்டும் காணப்படுவதில்லை: அவை மனிதர்கள் வசிக்கிற வீடுகளிலேயயும் பதிவாகி இருக்கின்றன என்பதை இக்கட்டுரைவாயிலாகத்தெளியலாம்.